பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**02 02 2026** **MONDAY** **6.30 PM**

**மாநிலச் செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

**1)** பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய பட்ஜெட் மேலும் உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** மத்திய பட்ஜெட்டில் தமிழகத்தின் ரயில்வேத் திட்டங்களுக்கு **7** ஆயிரத்து **611** கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

**3)** பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

**4)** டாஸ்மாக் பணியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

**5)** ஆசிய கோப்பை சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியா **16** தங்கம், **15** வெள்ளி, **13** வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**-- இனி விரிவான செய்திகள் ---**

<<<<<<<<<>>>>>>

பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய பட்ஜெட் மேலும் உத்வேகம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மூலதன செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு இதுவரை இல்லாத அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மருந்து உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கான பல்வேறு அம்சங்களும் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>

மத்திய பட்ஜெட்டில் தமிழகத்தின் ரயில்வே திட்டங்களுக்கு 7 ஆயிரத்து 611 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தின் ரயில்வே திட்டங்களுக்கு பிரதமர் முன்னுரிமை அளித்து வருவதாக குறிப்பிட்டார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பில் இருந்த காலத்தில். தமிழகத்தின் ரயில்வே திட்டங்களுக்கு 879 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில் தமிழகத்தில் ஆயிரத்து 334 கிலோமீட்டர் தொலைவிற்கு புதிய ரயில்வே வழிடத்தடங்கள் அமைக்கப்பட்ட்ருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேபோல், 3 ஆயிரத்து தொள்ளாயிரத்து 20 கிலோமீட்டர் தொலைவிலான வழித்தடங்கள் மின்மயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த காலக்கட்டத்தில் 738 ரயில்வே மேம்பாலங்கள் கட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்ரித் ரயில் நிலையங்கள் திட்டத்தின்கீழ் 2 ஆயிரத்து தொள்ளாயிரத்து 48 கோடி ரூபாய் செலவில் தமிழகத்தில் உள்ள 77 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் ஒன்பது வந்தே பாரத் ரயில் சேவைகள் இயக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் இதர ரயில் வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் அமைச்சர் புள்ளி விவரங்களுடன் எடுத்துரைத்தார்.

<<<<<<<<<>>>>>>

விவசாயிகள், பெண்கள், இளையோர் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் மத்திய பட்ஜெட் அமைந்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னையிலிருந்து ஹைதராபாத் மற்றும் பெங்களூருவுக்கு அதிவேக ரயில் வழித்தடம் அமைக்கப்படும் என்பதை சுட்டிக்காட்டினார்.

ஆதிச்சநல்லூரில் கலாச்சார மையம், பழவேற்காடு ஏரியில் பறவைகள் பார்வையிடும் மையங்கள், பொதிகை மலையில் மலையேற்ற சுற்றுலாவை ஊக்குவிக்கும் திட்டம் என தமிழகத்திற்கான திட்டங்கள் இதில் இடம்பெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார்.

மாவட்டந்தோறும் மகளிர் விடுதிகள் கட்டப்படும் என்ற அறிவிப்பு, மகளிர் மேம்பாட்டில் அரசுக்கு உள்ள அக்கறையை வெளிக்காட்டுவதாக அவர் கூறினார்.

தமிழக அரசு கேட்காமலேயே பல்வேறு திட்டங்களை மத்திய அரசு மாநிலத்திற்கு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க திமுக அரசு தவறிவிட்டதாகவும் திரு நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.

இதற்கிடையே, மத்திய பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள பல்வேறு அறிவிப்புகள் வரவேற்கத்தக்கது என்று காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த சரவணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — சரவணன் — 30 Sec. )***

மத்திய பட்ஜெட்டில் மூலதன செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்று தேனி மாவட்டத்தை சேர்ந்த வரி ஆலோசகர் திரு கருணை ஆனந்த் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — கருணை ஆனந்த் - 44 Sec. )***

<<<<<<<<>>>>>>

பட்ஜெட் தொடர்பான வினாடி — வினா இணையதள சேவையை மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த முதல் சுற்று வினாடி — வினா போட்டிகள் நாளை தொடங்கி, வரும் 17-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக கூறினார்.

இதில் முதலிடத்தை பெறுபவர்கள் இரண்டாம் சுற்று வினாடி — வினா போட்டியில் பங்கேற்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பட்ஜெட் குறித்து இளையோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த வினாடி — வினா நடத்தப்படுவதாக அவர் கூறினார்.

இதில் வெற்றிபெறுபவர்கள் பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் கலந்துரையாட வாய்ப்பு வழங்கப்படும் என்றும் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

மக்களவையின் மாண்பினை குலைக்கும் வகையில், எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி செயல்படுவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்காக நாட்டு மக்களிடையேயும், அவையிலும் திரு ராகுல்காந்தி மன்னிப்பு கோர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பாதுகாப்புப்படைக்கு எதிராக திரு ராகுல்காந்தி தெரிவித்துவரும் கருத்துகள் தேவையற்றது என்றும் அவர் கூறினார்.

அவை நெறிமுறைகளை மீறுவதை திரு ராகுல்காந்தி வாடிக்கையாக கொண்டுள்ளதாகவும் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

வேளாண் துறை சீரான வளர்ச்சியை கண்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், வேளாண் துறை சராசரியாக வருடத்திற்கு நான்கு புள்ளி நான்கு சதவீத வளர்ச்சியை கண்டு வருவதாக கூறினார்.

உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவை எட்டியதோடு, பல்வேறு பயறு உற்பத்தியில் உலக அளவில் முன்னிலையில் உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

டாஸ்மாக் பணியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற திமுக அரசு முன்வர வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பணி நிரந்தரம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை அவர்கள் பத்தாண்டுகளாக வலியுறுத்தி வருவதாக கூறியுள்ளார்.

இதில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நேரடியாக தலையிட்டு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் திரு வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<<>>>>>>

சதுப்பு நிலங்களை பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உச்சநீதிமன்ற உத்தரவுக்கு பின்னரும் சதுப்பு நிலங்களை அறிவிக்கை செய்ய திமுக அரசு மறுப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இது இயற்கைக்கும், சுற்றுச்சூழலுக்கும் இழைக்கப்படும் துரோகம் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலம் விருத்தசீர ஆற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகளை மாநில அமைச்சர் திரு காந்தி இன்று தொடங்கிவைத்தார்.

---------------

பெரம்பலூர் மாவட்டத்தில் காலை உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உணவின் தரம் குறித்து ஆட்சியர் திருமதி மிருணாளினி இன்று ஆய்வு செய்தார்.

------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பயிற்சி பெற்று அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-4 தேர்வில் வெற்றிபெற்றவர்களுக்கு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

---------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி இன்று வழங்கினார்.

-------------------

நீலகிரி மாவட்டம் குன்னூரில் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் மினி பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கு காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

---------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் போதைப்பொருள் புழக்கத்திற்கு எதிராக காவல்துறையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக கடந்த இரண்டு நாட்களில் மட்டும் **105** பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய கோப்பை சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியா **16** தங்கம், **15** வெள்ளி, **13** வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியின் பதக்கப்பட்டியலில் இந்தியா முதலிடத்தை பிடித்தது.

--------------

**Cappadocia** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் **Syndrela Das, Divyanshi Bhowmica** உள்ளிட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

---------------

ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டி இன்று புதுதில்லியில் தொடங்கியது.

--------------

பி பி சி-யின் சிறந்த ஆட்டக்காரரர் விருதுக்கு மகளிர் பிரிவில் இந்தியாவின் ஹர்மன் பிரீத் கவுர், ஸ்மிருதி மந்தனா மற்றும் திவ்யா தேஷ்முக் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

**<<<<<<<<END>>>>>>>**